வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 42 of 2016

வழக்கு சாட்சி – 8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மாதவன் | ஜாதி | : | – |
| தந்தை/கணவர் பெயர் | : | ராஜப்பன் | தொழில் | : | கட்டிட வேலை |
| கிராமம் | : | பெருந்தொலுவு | சமயம் | : | – |
| தாலுக்கா | : | திருப்பூர் | வயது | : | 47 |

முதல் விசாரணை: நாள்: 24.01.2023.

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக்கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னடையது தான். கடந்த 08.10.2015 ம் தேதி சுமார் காலை 9.00 மணியளவில் குமாரபாளையத்திலிருந்து கைக்காட்டிபுதூர் ரோட்டில் சென்று கொண்டுஇருந்தேன். அப்போது அங்கு நடந்த விபத்து சம்மந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். என்னுடன் ஆறுமுகம் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :</u>

2. இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன ரேணுகாதேவி எனக்கு உறவினார் என்றால் சரிதான். விபத்திற்கு பின்பு மருத்துவனையில் நான் ரேணுகாதேவியை பார்த்தேன். அ.சா.1 மணிகண்டன் எனக்கு தெரியும். மருத்துமவனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்து கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2023.01.24 21:44:16 +0530

நீதித்துறை நடுவர்
பல்லடம்